Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, SEPTEMBER 01, 2023

வெள்ளிக்கிழமை செப்டெம்பர் 01, 2023 | ஒளி: 09 கதிர் 075 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

37 கண் சத்திரசிகிச்சைகளில்

# 17 பேர் பாதிப்பு

## பார்வையை முற்றாக இருவர் இழந்தனர்






ரஞ்சித் ராஜபக்‌ஷ

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் நடத்தப்பட்ட 37 கண் சத்திரசிகிச்சைகளில் 17 பேர் பகுதியளவில் பார்வையிழந்துள்ளதுடன் இருவர் பூரண பார்வை இழந்துள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வைத்தியசாலையில் வியாழக்கிழமை (31) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் கனிஷ்க மேற்குறிப்பிட்ட விடயத்தை குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



# பணவீக்கம் 4 %ஆக வீழ்ச்சி

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் ஆண்டுக்கு ஆண்டு மாற்றத்தினால் அளவிடப்படும் பணவீக்கம் ஓகஸ்ட் மாத்தில் 4 சதவீதமாக குறைவடைந்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## இறுதி ரந்தோலி பெரஹராவில் இணைந்தார் ஜனாதிபதி ரணில்

வரலாற்று சிறப்புமிக்க கண்டி ஸ்ரீ தலதா மாளிகையின் எசல பெரஹராவின் இறுதி ரந்தோலி பெரஹராவில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் இணைந்தார்.

தொடர்ச்சி P2

கொக்குத்தொடுவாயில்

## அடுத்த செவ்வாய் அகழ்வுப் பணிகள்

சண்முகம் தவசீலன்




முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணிகளை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (05) ஆரம்பிக்குமாறு முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதவான் தர்மலிங்கம் பார்த்திபன், வியாழக்கிழமை (31) கட்டளையிட்டார்.

குறித்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அகழ்வுப் பணிகளுக்கு அனைத்து திணைக்களங்களும் சம்மதம் தெரிவித்ததை அடுத்து மேற்குறிப்பிட்ட திகதி குறிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

## கயிறு தின்பவரை தள்ளிவிட முயற்சி

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச போட்டியிட மாட்டார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## விலைக் கழிவுகளுடன் எரிபொருள் விநியோகம்

### முதல் நிலையத்தை திறந்தது சினோபெக்

சீனாவின் பீஜிங்கை தளமாகக் கொண்ட முன்னணி சர்வதேச பெற்றோலிய நிறுவனமான சினோபெக், இலங்கையில் விலைக் கழிவுடன் தனது எரிபொருள் விநியோகத்தை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளது.

கொழும்பு, மத்தேகொட பகுதியில் உள்ள அதன் முதல் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் புதன்கிழமை (30) தனது உத்தியோகபூர்வ எரிபொருள் விநியோகத்தை ஆரம்பித்த குறித்த நிறுவனம் செப்டெம்பர் மாதத்துக்குள் 150 நிலையங்களில் விநியோகத்தை ஆரம்பிக்கவுள்ளது.

பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றை லீற்றருக்கு 3 தலா ரூபாய் விலைக் கழிவுடன் குறித்த நிறுவனம் வழங்கி வருகிறது.

இலங்கையின் நிலையான மற்றும் தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்யும் வகையில் முன்னணி சர்வதேச எரிபொருள் நிறுவனமான சினோபெக் நிறுவனத்துடன் கடந்த மே மாதம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியை சந்தித்தார் அமெரிக்க செனட்டர்



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க செனட் சபை உறுப்பினர் கிறிஸ் வென் ஹொலன் பிற்பகல் கண்டி ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்தார்.

தொடர்ச்சி P2



குருந்தூர் மலை விவகாரத்தில்

# கட்டளைகளை மதிக்கவில்லை

### முல்லை நீதிமன்றம் அறிவிப்பு

சண்முகம் தவசீலன்

குருந்தூர் மலை விவகாரத்தில் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் ஏற்கெனவே வழங்கிய கட்டளைகளை மதிக்காது நிர்மானப் பணிகள் இடம்பெற்றுள்ளன எனவும் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் முல்லைத்தீவு நீதிமன்றக் கட்டளைகளை மதித்து நடைமுறைப்படுத்தவில்லை என்றும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா, வியாழக்கிழமை (31) அறிவித்தார்.

தொடர்ச்சி P2

தலைவிரித்தாடும் பாதாள உலகம்:

## அமைச்சர் டிரானுக்கு எதிராக நம்பில்லையில்லா பிரேரணை?

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வர தயாராகி வருவதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் லலித் எல்லாவல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 3 ஆயிரம் தாதியர்களை இணைக்க நடவடிக்கை



இலங்கையில் மேலும் 3 ஆயிரம் தாதியர்களை தாதியர் சேவையில் இணைத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் ஏதேனும் பிரச்சினை நிலவும் பட்சத்தில் இது தொடர்பான அமைச்சரவை பத்திரத்தை தயாரிக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

மலையக பெருந்தோட்டத்துறையை

## இலாப பங்கீட்டு முறைக்கு மாற்றுவதே எமது நோக்கம்

மலையக பெருந்தோட்டத்துறையில் நாள் வேதன முறைமைக்கு பதிலாக இலாப பங்கீட்டு முறையை உருவாக்கி, தொழிலாளர்களை உற்பத்தி பங்குதாரர்களாக மாற்றுவதே எமது நோக்காக உள்ளது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.



தொடர்ச்சி P2

## ஜெரோமின் ரிட் மனு ஒத்திவைப்பு

தன்னைக் கைது செய்வதைத் தடுக்கும் உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி போதகர் ஜெரோம் பெர்னாண்டோ தாக்கல் செய்த ரிட் மனுவை செப்டெம்பர் 21ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக மேன்முறையீட்டு நீதிமன்றம், வியாழக்கிழமை (31) அறிவித்தது.

இந்த மனுவை பேணுவதற்கு எதிராக சட்டமா அதிபர் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேபனைகளை தாக்கல் செய்துள்ளதாக நீதிமன்றத்தில் அறிவிக்கப்பட்டதை அடுத்து மேற்குறிப்பிட்ட திகதி அறிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

இந்து சமுத்திரத்தில் சீன பிரசன்னம்

## நாளை வருகிறார் ராஜ்நாத் சிங்

சீனாவின் போர்க்கப்பலான ஹய் யாங் 24 ஹஓ இந்த மாத ஆரம்பத்தில் கொழும்பில் நங்கூரமிடப்பட்ட நிலையிலும் சீன ஆய்வுக் கப்பலான ஷி யான் 6 எதிர்வரும் ஒக்டோபர் மாதம் இலங்கைக்கு வரவுள்ள நிலையிலும் இந்தியாவின் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

தொடர்ச்சி P2

எமது இன்றைய மௌனம்

## எதிர்கால சந்ததிக்கு செய்யும் துரோகம்

எமது இன்றைய மௌனம் எதிர்கால சந்ததிக்கு செய்யும் பாரிய துரோகம் என்பதனை மனதிற்கொள்வோம் என்றும் அரசியல் வேறுபாடுகளை தவிர்த்து இணைந்து பயணிப்போம் என்றும் தெரிவித்துள்ள புழுதி- சமூக உரிமைகளுக்கான அமைப்பு, ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துவதற்கு அரசாங்கமும் அதன் பொலிஸாரும் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## குரல்களை அமைதியாக்கி குறிவைத்து துன்புறுத்தல்



### அடக்குமுறையை நிறுத்த அவசர அழைப்பு

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

குடிமக்களின் உரிமையை பறிக்க முயன்று குடிமக்களை பெரும்பாலும் சக்தியற்றவர்களாக ஆக்குகிறார்கள் என்றும் குரல்களை அமைதிப்படுத்துவதில் அவர்கள் குளிர்ச்சியடைகிறார்கள் என்றும் தெரிவித்த "ஜனநாயகத்துக்கான சிவில் சமூகக் கூட்டமைப்பு", அதிகாரிகளைக் கேள்வி கேட்பவர்களைக் குறிவைத்து துன்புறுத்துவது மக்கள் மத்தியில் சுய தணிக்கையை உருவாக்கியுள்ளது எனவும் தெரிவித்தது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# 17 பேர் பாதிப்பு

சமூக வலைத்தளங்களில் பல தகவல்கள் வந்தாலும் உண்மை நிலவரத்தை இங்கு வெளிப்படுத்த வேண்டும் என்ற அவர், கண்களுக்கு செலுத்தப்பட்ட மருந்துகள் வைத்தியர்களால் தவறாகியதாக நினைக்கின்றனர் என்றும் இதற்கான பொறுப்பை ஏற்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

அரசின் நலனுக்காக தரம் தாழ்ந்த மருந்துகள் கொள்வனவு செய்யப்படுவதாகவும் அவசர கொள்வனவு விலையில் பல வகையான மருந்துகள் கொண்டு வரப்படுவதாகவும் பெரும்பாலானவை தரமற்றவை என்றும் குறிப்பிட்டார்.

அவற்றில் ப்ரெட்னிசோலோன் கண் மருந்தும் ஒன்று என்றும் இனிமேல் இதுபோன்ற தரம் குறைந்த மருந்துகளை கொண்டு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தார்.

வைத்தியர்கள் என்று சொன்னாலும் சில இடங்களில் மனநோயாளிகள் போல நடத்தப்படுகிறோம் எனவும் இந்த நிலைமைக்கு இழுத்திருப்பது அரசாங்கமே என்றும் கூறிய அவர், வைத்தியர்களுக்கு உரிய வசதிகள் செய்து தரப்படாததால் அவர்கள் அதிகளவில் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர் என்றார்.

சத்திரசிகிச்சைகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு எந்த இழப்பீடு நிவாரணமும் வழங்கவில்லை

இல்லை என்றும் இழப்பீடு வழங்கினாலும் அவை எவ்வளவு நாட்களுக்கு போதுமானது என்றும் கேள்வியெழுப்பிய அவர், அப்பாவி மக்களுக்கு இழப்பீடுக்கு அப்பாற்பட்ட ஒன்றை வழங்குவது கட்டாயமாகும் என்றார்.

## பணவீக்கம் 4 %ஆக வீழ்ச்சி

2023 ஜூலை மாத்தில் 6.3% ஆக இருந்த பணவீக்கம் ஒகஸ்ட் மாதத்தில் 4% ஆகக் குறைந்துள்ளதாக தெரிவித்த திணைக்களம், ஜூலை மாதம் -1.4% ஆக காணப்பட்ட உணவுப் பணவீக்கம் ஒகஸ்ட் மாதம் -4.8% ஆக குறைந்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

உணவுப் பொருட்களில் 0.41 சதவீதமாகக் குறைந்து, உணவு அல்லாத பொருட்களின் விலை 0.39 சதவீதமாக அதிகரித்ததன் மூலம் மாதந்தோறும் மாற்றம் ஏற்பட்டது.

ஜூலை மாத்தில் 6.396 சதவீதமாகக் காணப்பட்ட ஒட்டுமொத்த பணவீக்க விகிதம் ஒகஸ்ட் மாதத்தில் 4.0% ஆக குறைந்துள்ளதுடன், ஜூலையில் 10.5 சதவீதமாக காணப்பட்ட உணவு அல்லாத பணவீக்கம் ஒகஸ்ட் மாதத்தில் 8.7 சதவீதமாக குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கயிறு தின்பவரை தள்ளிவிட முயற்சி

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்த இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

டலஸ் அல்லது மைத்திரிபால அல்லது அநுர திசாநாயக்க அல்லது கயிறு தின்னும் ஒருவரைத் தள்ளிவிட்டு சஜித் பிரேமதாச அணி இந்த ஜனாதிபதித் தேர்தலை தவிர்க்கும் என்றும் குறிப்பிட்டார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் சஜித் பிரேமதாச நிச்சயமாக யால காட்டு பகுதிக்கு சென்றுவிடுவார் எனத் தெரிவித்த ரங்கே பண்டார, இப்போது யால காட்டில் நுளம்புகளை விரட்டி உண்ணிகளை அடிக்க வேண்டிய அவசியமில்லை எனவும் தெரிவித்தார்.

## அடுத்த செவ்வாய் அகழ்வுப் பணிகள்

விசாரணையில் முல்லைத்தீவு சட்ட வைத்திய அதிகாரி க.வாசுதேவா, யாழ்ப்பாணம் சட்ட வைத்திய அதிகாரி எஸ். பிரணவன், சட்டத்தரணிகளான எம். எஸ். சுமந்திரன், வி கே.நிரஞ்சன், ரணித்தா ஞானராசா, வி.எஸ். தனஞ்சயன் மற்றும் மாவட்ட செயலகம், பிரதேச செயலகம் மற்றும் பிரதேச சபை அதிகாரிகள், பொலிஸார் உள்ளிட்ட தரப்பினர் பலரும் முன்னிலையாகியிருந்தனர்

அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்புடன் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூன் மாதம் 29 ஆம் திகதி, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினை மேற்கொள்வதற்காக கொக்குத்தொடுவாய் பகுதியில் கனரக இயந்திரம் கொண்டு நிலத்தை தோண்டிய போது சில மனித எச்சங்கள் இந்த மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இறுதி ரங்தோலி பெரஹராவில் இணைந்தார் ஜனாதிபதி ரணில்

பேராசிரியர் மைத்ரி விக்ரமசிங்க, அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ஷ, சுசில் பிரேமஜயந்த், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்க செனட் சபை உறுப்பினர் கிறிஸ் வென் ஹொலனும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோரும் ஜனாதிபதியுடன் இணைந்து பெரஹராவைக் கண்டுகளித்தனர்.

புதன்கிழமை (30) இரவு 7.03 சுப நேரத்தில் ஸ்ரீ தலதா மாளிகையின் முன்பாக வடக்கு திசையை நோக்கிப் பயணித்த எசல பெரஹரா, தலதா வீதி, யட்டிநுவர வீதி, கந்த வீதி, டி.எஸ். சேனாநாயக்க வீதி ஊடாக பயணித்து ரஜ வீதியூடாகச் சென்றது.

வரலாற்று சிறப்புமிக்க எசல பெரஹராவின் இறுதி ரந்தோலி பெரஹராவைக் காண, பாதையின் இருபுறமும் பெருமளவில் மக்கள் திரண்டிருந்தனர்.

## விலைக் கழிவுகளுடன் எரிபொருள் விநியோகம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா இந்தியன் ஒயில் கம்பனி ஆகியவை கடந்த காலத்தில் எரிபொருள் ஏற்றுமதிக்கு போதுமான அந்நியச் செலாவணியை பெற்றுக்கொள்ள முடியாமல் பெரும் சவாலை எதிர்கொண்டதை அடுத்தே புதிய நிறுவனங்களை சந்தைக்கு அழைக்க தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி, இந்த நிறுவனங்கள் குறைந்தபட்சம்,செயற்படத் தொடங்கி ஆரம்ப ஓராண்டு காலத்தில் வெளிநாட்டு மூலங்கள் மூலம் எரிபொருளை கொள்வனவு செய்வதற்கு தங்கள் சொந்த நிதியைப் பயன்படுத்த வேண்டும்.இதற்கான அவர்களின் ஒப்புதலைப் பெற்ற பிறகு, பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்கள் தங்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க அழைக்கப்பட்டதை அடுத்து, ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

## ஜனாதிபதியை சந்தித்தார் அமெரிக்க செனட்டர்

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோரும் செனட்டருடனான சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## கட்டளைகளை மதிக்கவில்லை

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை பகுதியிலே அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரை உள்ளிட்ட கட்டுமான பணிகள் தொடர்பிலான வழக்கு வியாழக்கிழமை (31) திகதியிடப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு நீதவான் நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது ஆலய நிர்வாகம் சார்பிலே முல்லைத்தீவு மாவட்டத்தின் சட்டத்தரணிகள் அனைவரும் முன்னிலையாகி இருந்தனர்.

ஆலய நிர்வாகம் சார்பாக நிர்வாகிகள் எம். பிக்களான செல்வராசா கஜேந்திரன், சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், எம் ஏ சுமந்திரன், முன்னாள் மாகாண சபை விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்து கொண்டனர்

இதேவேளை, தொல்லியல் திணைக்களம் சார்பாக தொல்லியல் திணைக்களத்தின் வவுனியா, முல்லைத்தீவு,மன்னார் மாவட்டங்களின் உதவி பணிப்பாளர் மற்றும் தொல்லியல் திணைக்கள சட்டத்தரணிகள் பொலிசார் நீதிமன்றத்தில் முன்னிலையாகி இருந்தனர் போதே நீதிபதி மேற்குறித்த விடயத்தை அறிவித்தார்.

## 3 ஆயிரம் தாதியர்களை இணைக்க நடவடிக்கை



இலங்கையில் தாதியர் சேவை தொடர்பான அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் சுகாதார அமைச்சில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் பணிப்புரைகளை விடுத்துள்ளார்.

அதன்படி, 2018 ஆம் ஆண்டு தாதியர் பயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட சுமார் 2,500 தாதியர் பயிற்சியாளர்களையும், 500 தாதியர் பட்டதாரிகளையும் சேவையில் இணைத்துக் கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், 2019/2020 உயர்தரப் பிரிவில் தாதியர் பயிற்சிக்கான விண்ணப்பங்களை அழைப்பது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பை செப்டம்பர் நடுப்பகுதிக்குள் வெளியிட சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது.

## இலாப பங்கீட்டு முறைக்கு மாற்றுவதே எமது நோக்கம்

தேசிய தொழிலாளர் ஆலோசனை சபைக்கூட்டம் தொழில் அமைச்சர் மனுச நாணயக்கார தலைமையில் தொழில் அமைச்சில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பங்கேற்று ஆலோசனைகளை முன்வைக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,"இலங்கையின் பொருளாதாரத்துக்கு 200 வருடங்களுக்கு மேலாக பங்களிப்பு வழங்கிவரும் பெருந்தோட்டத்துறை நாள் வேதன முறையில் இருந்து, இலாப பங்கீட்டு முறைமைக்கு மாற வேண்டும் என்பதே எமது நோக்கமாக உள்ளது.

இலங்கையில் வாழும் எமது இந்திய வம்சாவளி மக்கள் இங்கு வந்து 200 வருடங்கள் கடந்துள்ள நிலையில், இன்னமும் நாள் வேதனத்தையே பெறுகின்றனர். இது அவர்களுக்கு வழங்கும் அங்கீகாரமாக அமையாது. எனவே, இலாப பங்கீட்டு முறையுடன் அவர்களையும் இந்த தொழில்துறையில் உற்பத்தியாளர்களாக மாற்றுவதே ஏற்புடைய நடவடிக்கையாக அமையும்.

இதற்குரிய வேலைத்திட்டமே எனது அமைச்சு ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் அதற்கான முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளது.

வேலையின்போது குளவி கொட்டுதல் உள்ளிட்ட திடீர் அனர்த்தங்களால் உயிரிழப்பு சம்பவங்கள் கூட பதிவாகியுள்ளன. சிலர் அங்கவீனமடைகின்றனர். தற்போது தொழில்துறை மாற்றம் பற்றி பேசப்படுகின்றது. ஆகவே, அரச அங்கீகாரத்துடன் தொழிலாளர்களுக்காக காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளோம்.

அதேவேளை, பெருந்தோட்டத்தொழிலாளர்களை கௌரவிப்பதற்கான நாளொன்றை ஒதுக்குவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது. இதற்கான கூட்டு அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்படும்" என்றார்.

## அமைச்சர் டிரானுக்கு எதிராக நம்பில்லையில்லா பிரேரணை?

தற்போது எந்த நேரத்திலும் கொலை செய்யப்படலாம் என்ற அச்சத்துடன் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வருவதாக தெரிவித்த அவர், குறிப்பிட்ட காலத்திற்குள் பாதாள உலக செயற்பாடுகளை அமைச்சரால் கட்டுப்படுத்த முடியாவிட்டால் நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வரவுள்ளதாக குறிப்பிட்டார்.

தற்போதைய நிலை தொடருமானால், அவரை பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணையை அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்களுடன் இணைந்து பின்வரிசை எம். பிக்கள் கொண்டுவரவுள்ளதாக கூறினார்.

அமைச்சரால் ஒரு மாதத்துக்குள் நாட்டில் அமைதியான சூழலை ஏற்படுத்த முடியாவிட்டால் அவரை இராஜினாமா செய்யுமாறு கோரவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

## ஜெரோமின் ரிட் மனு ஒத்திவைப்பு

போதகருக்கு எதிராக பணமோசடி தடுப்பு சட்டத்தின் கீழ் விசாரணை நடத்தப்பட்டு வரும் நிலையில், இந்த மனுவை விசாரணை செய்யாமலேயே தள்ளுபடி செய்யுமாறு அரச சட்டத்தரணி மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

கடந்த மே மாதம் 18ஆம் திகதியன்று பெர்னாண்டோ என்ற போதகரால் பிற மதங்களை அவமதிக்கும் வகையில், கருத்துகள் வெளியிடப்பட்டது.

போதகரின் வாக்குமூலங்கள் தொடர்பில் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் ஊடாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து அவருக்கு எதிராக வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்ட நிலையில், தன்னை கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி குறித்த மனுவை அவர் தாக்கல் செய்திருந்தார்.

## நாளை வருகிறார் ராஜ்நாத் சிங்

செப்டம்பர் 2, 3 ஆம் திகதிகளில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்திக்கவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் நிலவும் சவால்களை எதிர்கொள்வதற்காக இருதரப்பு இராணுவ உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் பிரசன்னம் அதிகரித்து வரும் நிலையில், இலங்கை துறைமுகங்களில் கடற்படை கப்பல்கள் மற்றும் உளவுக் கப்பல்கள் அவதானிக்கப்பட்டுள்ளதாக அந்த ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையின் ஆயுதப் படையினரின் திறனை விருத்தி செய்வதற்கு இந்தியா உறுதி பூண்டுள்ளதாகவும், இதற்கமைய இலங்கைக்கான 150 மில்லியன் டொலர் பாதுகாப்பு கடன் வசதியை இந்தியா நீடித்துள்ளதாகவும் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

## எதிர்கால சந்ததிக்கு செய்யும் துரோகம்

திருகோணமலை ஒருங்கிணைப்பு கூட்டம் மற்றும் மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் நிலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்த அறிக்கையிலேயே குறித்த அமைப்பு மேற்குறிப்பிட்ட விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருந்ததாவது, “திருகோணமலையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மண்டபத்திற்குள் சில பௌத்த பிக்குக்கள் உள்நுழைந்து விகாரை கட்டுவதற்கான அனுமதி வேண்டும் என்று ஆர்ப்பரிக்கின்றனர், மட்டக்களப்பில் மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் நில நிலைமைகளை ஆராயச் சென்ற சர்வமத தலைவர்களையும் சிவில் சமூக அமைப்பினரையும் பௌத்த பிக்கு தலைமையிலான குழு சிறை பிடித்து தடுத்து வைத்திருந்தனர்.

கடந்த சில நாட்களில் கிழக்கில் நடைபெற்ற இரு வேறு நிகழ்வுகளை நாம் செய்தியாக கடந்து செல்ல மெல்ல மெல்ல பழக்கப்படுத்த படுகிறோம்.

தொடர்ச்சியாக தொல்லியல் அடையாளமுள்ள இடங்களாக இனங்காணப்பட்ட தமிழர் வழிபாட்டிடங்கள் மற்றும் வாழ்விடங்கள் மீதான பௌத்த ஆக்கிரமிப்பு நம்மை திட்டமிட்டு விரக்தி மனநிலைக்குள் தள்ளி ஆக்கிரமிப்பை எதிர்க்க முடியாத மனநிலைக்கு இட்டுச் செல்கிறது.

பௌத்த மதகுருக்கள் உள்நுளைந்ததும் அத்தனை பேரும் எழுந்து மரியாதை செய்கின்றனர். இந்த நிலைமை ஆக்கிரமிப்பின் வீரியத்தை வெளியே சொல்ல போதுமானதாகும்.

பண்பாட்டு இடங்கள், பொருளாதார கட்டுமானங்கள், வாழ்விடங்கள் என சிங்களம் தனது ஆக்கிரமிப்பை வலுவான மத பின்னணியில் முறைசார் அளவீடுகளின் அடிப்படையில் செயற்படுத்தி வருகிறது. தமிழ்த்தேசிய அரசியல் இந்த ஆக்கிரமிப்புகளிற்கான மறுதலிப்பு நிகழ்ச்சிகளினுள்ளே திட்டமிடப்பட்டு மூழ்கடிக்கப்பட்டிருக்கிறது.

இனமாக திரட்சி கொள்ளும் வகையிலான தயார்படுத்தலை தமிழர் தரப்பு கைக்கொண்டு விடக்கூடாது என்பதற்காக திட்டமிட்டு சிங்களம் விரித்த வலைக்குள் நாம் சிக்கியிருக்கிறோம்.

ஆக்கிரமிப்பு ஊடாக இன முறுகல் ஒன்றை ஏற்படுத்தி வாக்கு வங்கிகளை சரிசெய்து கொள்ள சிங்கள பெருந்தேசிய கட்சிகள் கங்கணம் கட்டி நிற்கின்றன.

தமிழ்த்தேசிய தரப்பு தனது இலக்கை அடைவதற்கான வழிவகைகளை முறையாக கண்டு பிடித்து அதன்படி பயணப்பட வேண்டிய நேரம் இதுவாகும். ஆக்கிரமிப்புக்களுக்கு பதிலிறுக்கும் சம காலத்தில் நமக்கான எதிர்கால வேலைத்திட்டங்களிலும் கவனக் குவிப்பை செய்வதாக வேண்டும்.

## குரல்களை அமைதியாக்கி குறிவைத்து துன்புறுத்தல்

உண்மையான மற்றும் சமமான பொருளாதார மீட்சியை உறுதி செய்வதற்காக, அரசாங்கத்தின் அடக்குமுறையை நிறுத்தவும், மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும் அவசர அழைப்பு விடுப்பதாக “ஜனநாயகத்துக்கான சிவில் சமூகக் கூட்டமைப்பு” தெரிவித்துள்ளது.

இலங்கை மன்றக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற “ஜனநாயகத்துக்கான சிவில் சமூகக் கூட்டமைப்பு” செயற்பாட்டாளர்களின் ஒன்று கூடலின்போது பல பிரகடனங்களை அந்த அமைப்பு வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, “கருத்துச் சுதந்திரம், தகவல் அறியும் உரிமை, கருத்து வேறுபாடு உரிமை, எதிர்ப்பு உரிமை, சங்கச் சுதந்திரம் மற்றும் உரிமை போன்ற அரசியலமைப்பு உத்தரவாதம் அளிக்கப்பட்ட உரிமைகள் மற்றும் சுதந்திரங்களுடன், நாட்டுக்குள் ஜனநாயக வெளி வேகமாகச் சுருங்குவது குறித்து சிவில் சமூகக் கூட்டமைப்பு ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்துகிறது.

மேலும், சர்வதேச வாக்குறுதிகளுக்கு மாறாக அரசியல் எதிரிகள், சிவில் சமூக ஆர்வலர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை குறிவைக்கும் வகையில் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் மற்றும் சர்ச்சைக்குரிய பயங்கரவாத தடுப்புச் சட்டம் ஆகியவற்றை ஆட்சியாளர்கள் துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர்.

# தலைவரின் கொள்கையை உயிரோட்டமாக்க வாரீர்

■ நூருல் ஹுதா உமர்

தனது கொள்கைகளை விதையாக வீழ்த்தி முஸ்லிம் அரசியலில் புதிய முகவரி எழுதி தனது அரசியலில் தனித்தன்மையை உறுதிப்படுத்திய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபக தலைவரும், முன்னாள் அமைச்சருமான ஜனாதிபதி சட்டத்தரணி பெருந்தலைவர் கலாநிதி எம்.எச். எம். அஸ்ரப் அவர்களின் நினைவு தினமும் துஆ பிராத்தனையும் அடங்கிய தேசிய நிகழ்வு எதிர்வரும் 16ம் திகதி தலைவரின் தொகுதியான கல்முனை தொகுதியின் சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச். எம். எம். ஹரீஸ் அறிவித்துள்ளார்.

தனது அறிக்கையில் மேலும், இந்நிகழ்வை உயிரோட்டமுள்ளதாக மாற்றியமைக்க தலைவர் அஷ்ரபை நேசிக்கும் உறவுகள் எல்லோரும் பிரதேசங்கள் கடந்து, மாறுபட்ட கட்சி கொள்கைகள் துறந்து ஒன்றிணைவோம். முஸ்லிம் அரசியலின் தந்தையாக நோக்கப்படும் அவரின் கொள்கைகள் காலத்தால் அழியாதவை. உள்நாட்டு இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளுக்கான தீர்வாகட்டும், அபிவிருத்தி விடயங்களாக இருக்கட்டும், நாட்டின் இறையாண்மையாகட்டும், தேசிய பாதுகாப்பாகட்டும், சர்வதேச ராஜதந்திர உறவுகளாகட்டும், வறுமை ஒழிப்பு, சமூக நீதி என்ற பல்வேறு விடயங்களிலும் தனித்தன்மை கொண்ட அந்த தலைவன் முன்வைத்த விடயங்களை நாம் கண்களூடாக பார்த்தவர்கள் ஏராளம். அவரை போன்ற கொள்கைகளை வகுக்கவும், நீண்டகால திட்டங்களை முன்மொழியவும் இதுவரை முடியவில்லை. அவ்வாறான வெற்றிகரமான திட்டங்களை அவர் முன்வைத்துள்ளார்.

இப்போதைய இளைஞர்கள் மத்தியில் இந்த பெருந்தலைவரின் கொள்கைகளை எடுத்துரைக்கும் இந்நிகழ்வில் இளைஞர்கள் அணிதிரண்டு வந்து கொள்கைகளை விதையாக வீழ்த்தி முஸ்லிம் அரசியலில் புதிய முகவரி எழுதிய தலைவரின் வாழ்வை அசைபோட ஒன்றிணைவோம். தனது அரசியலில் தனித்தன்மையை உறுதிப்படுத்திய பெருந்தலைவர் கலாநிதி எம்.எச்.எம். அஸ்ரப் அவர்களின் நினைவு தினமும் துஆ பிராத்தனையும் அடங்கிய "தலைவர் நினைவு தினம்" தேசிய நிகழ்வில் கட்சி கொள்கைகளை மறந்து தலைவர் அஸ்ரப் எனும் ஆளுமையை கற்க ஒன்றிணைவோம் என கேட்டுக்கொண்டுள்ளார்.

# எல்லா சமூகங்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வே இலக்கு

## பிரதம நிறைவேற்று அதிகாரி சிராஜ் மஷ்ஹூர்

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்




முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகள் மாத்திரமல்லாது எல்லா சமூகங்களுடைய பிரச்சினைகளுக்கும் முடிந்த வரை தீர்வுகளை அடைவதற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய ஓர் ஆய்வு மையமாக சமூக நீதிக்கான கற்கை மையத்தை நகர்த்திச் செல்வதே தமது இலக்கு என்று அந்த அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி சிராஜ் மஷ்ஹூர் தெரிவித்தார்.

"13வது திருத்தமும்இ அதற்கு அப்பாலும்: முஸ்லிம் சமூகத்திற்கான அரசியல் தீர்வினை நோக்கி" என்ற தலைப்பிலான ஆய்வரங்கம் புதனன்று (30) வெள்ளவத்தை பெண்கள் கல்வி மற்றும் ஆய்விற்கான மையத்தில் நடைபெற்றது.

சமூக நீதிக்கான கற்கை மையத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இவ்வாய்வரங்கில்இ முஸ்லிம் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தி பல்வேறு சமூக - அரசியல் செயற்பாட்டாளர்கள்இ மாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள்இ கல்வியலாளர்கள் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

ஆய்வரங்கை நெறிப்படுத்திய சமூக நீதிக் கட்சியின் தலைவர் நஜா முஹம்மத்இ "சமூக நீதிக் கட்சியின் ஆய்வுப் பிரிவாக செயல்படும் சமூக நீதிக்கான கற்கை மையம்இ கட்சி அரசியலுக்கு அப்பால் பரந்துபட்ட தளத்தில் சகலரையும் உள்வாங்கி செயற்படும் ஒரு பொதுத் தளமாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. எனவே மிகுந்த நம்பிக்கையோடு சமூக நீதிக்கான கற்கை மையத்தின் செயல்பாடுகளை முன்னோக்கி நம்பிக்கையோடு நகர்த்த முடியும் என்ற உத்வேகத்தை தந்துள்ளது" என்றார்.

சிரேஷ்ட சட்டத்தரணி பஹீஜ்இ 13ம் திருத்தச் சட்டம் மற்றும் அதன் முழு அமுல்படுத்தலில் முஸ்லிம் சமூகத்திற்கு உள்ள சாதக பாதகங்கள் குறித்து அறிமுக உரையை நிகழ்த்தினார்.

இவ்வாய்வரங்கத்தில் கொழும்பு பல்கலைக்கழக அரசியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் ஈரான் இஸ்லாமியக் குடியரசுக்கான முன்னாள் தூதருமான கலாநிதி அனீஸ் ஷரீப்இ கிண்ணியா மஜ்லிஸ் சூறாவின் செயலாளரும் ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற பதிவாளருமான நியாஸ்இ மாகாண சபை முன்னாள் உறுப்பினர் யூ.எல்.எம்.முபீன்இ பாராளுமன்ற சிரேஷ்ட ஆய்வாளர் அஜ்வதீன்இ ஜனாதிபதி சட்டத்தரணியும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான எம். எம்.சுஹைர்இ சிரேஷ்ட சட்டத்தரணியும் முன்னாள் அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினருமான ஜாவித் யூஸுப்இ முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான்இ சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் உட்பட இன்னும் பல துறைசார் புத்திஜீவிகள் கலந்து கொண்டர்.

இவ்வரங்கத்தில் 13 ஆவது திருத்தச் சட்டம் குறித்து முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாட்டிற்கான தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டுஇ ஆய்வரங்கத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள்இ அறிக்கையாக வெளியிடப்படல் வேண்டும் என்றும் முடிவு தீர்மானிக்கப்பட்டது.

# மண்மேட்டில் மோதி ஓட்டோ விபத்து

■ ரஞ்சித் ராஜபக்ஷ



அதிவேகமாக பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று வீதியோரத்தில் இருந்த மண் மேட்டில் மோதி விபத்துக்குள்ளானதில் முச்சக்கரவண்டியின் சாரதி பலத்த காயமடைந்து டிக்கோயா-கிளங்கன் ஆரம்ப வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

ஹட்டன் நோர்டன்பிரிட்ஜ் பிரதான வீதியில் வனராஜா தோட்டத்திற்கு அருகில் டிக்கோயாவிலிருந்து காஸ்ட்லரி, கார்பெக்ஸ் தோட்டம் வரை செலுத்தப்பட்ட முச்சக்கரவண்டியின் வேகத்தை சாரதியால் கட்டுப்படுத்த முடியாமல் விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தின் போது முச்சக்கரவண்டியில் மூவர் பயணித்துள்ளதுடன், விபத்தில் சாரதி காயமடைந்துள்ளார்.



# சந்நிதியான் தேர்திருவிழாவில் 25 பவுண் தங்க நகைகள் திருட்டு

■ எஸ் தில்லைநாதன்தொ

ண்டமானாறு செல்வ சந்நிதி ஆலய தேர்த்திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர்களிடமிருந்து 25 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளன.

ஆலய தேர் திருவிழா புதன்கிழமை (30) நடைபெற்றது. அதன் போது நாட்டின் பல பாகங்களில் இருந்தும் , புலம்பெயர் நாடுகளில் இருந்தும் பெருமளவானோர் கலந்து கொண்டிருந்தனர்.

அவ்வேளையில், சன கூட்டத்தை பயன்படுத்தி திருடர்கள் ஆலயத்திற்கு வருகை தந்திருந்தோரிடமிருந்து நகைகளை திருடி உள்ளனர்.

நகை திருட்டுக்கள் தொடர்பில் வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு 11 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. முறைப்பாட்டின் பிரகாரம் சுமார் 25 பவுண் நகைகள் திருடப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.



# மழை வேண்டி விஷேட தொழுகை

■ எம் எஸ் எம் நூர்தீன்

நாட்டில் நிலவும் வறட்சியான காலநிலை நீங்கி மழை பெய்யவேண்டுமென ஆசிக்கும் விசேட தொழுகையும் பிரார்த்தனையும் ஏறாவூர்ப் பிரதேசத்தில் புதன்கிழமை (30) நடைபெற்றன.


ஏறாவூர் ஜம்இய்யத்து உலமா சபையின் ஏற்பாட்டில் ஏறாவூர் அலிகார் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இந்நிகழ்வின்போது மௌலவி எல்எச். அப்துல்லா ஹாஷிமி தொழுகை நடாத்தினார்.

இதையடுத்து கூட்டுப்பிரசங்கம் நடைபெற்றது. உலமா சபையின் புதிய தலைவர் மௌலவி ஏஎல். சாஜித் ஹுஸைன் பாகவி பிரார்த்தனை நடாத்தினார்.

மார்க்க அறிஞர்கள், மதரசா மாணவர்கள் , பொதுமக்கள் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்கள் என பெரும் எண்ணிக்கையிலான முஸ்லிம்கள் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். பிரார்த்தனையில் பங்கேற்றவர்கள் மனமுருகி பாவமன்னிப்புக்கோரி பிரார்த்தனை செய்தனர். கிழக்கு மாகாணத்தில் மிக நீண்டகாலமாக மழை பெய்யாததன் காரணமாக நீர்நிலைகள் வற்றியுள்ளதையடுத்து சில பிரதேசங்களில் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

### இலங்கை அரசாங்கம் பொதுமக்களை

# தொடர்ந்தும் இருளில் வைத்திருக்கிறது




| | மொத்தம் | வெளிநாடு | உள்நாடு |
|---|---|---|---|
| திட்டங்களின் எண்ணிக்கை | 60 | 24 | 36 |
| மொத்த மதிப்பிடப்பட்ட செலவு (ரூ. மில்லியன்) | 2,543,362 | 680,592 | 1,862,770 |

VR

மேலதிக தகவலுக்கு: https://dashboards.publicfinance.lk/infrastructure-watch/ ஐப் பார்வையிடவும்

உட்கட்டமைப்பு கருத்திட்டக் கண்காணிப்பான் எனும் ஒன்லைன் டாஷ்போர்டின் முதலாவது கட்டத்தை வெரிட்டே ரிசர்ச் மும்மொழியில் 2022 ஆம் ஆண்டு தொடங்கியது. தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் ஒரு ட்ரில்லியனுக்கும் அதிகமான பெறுமதியுள்ள 60 பாரிய உட்கட்டமைப்புக் கருத்திட்டங்கள் தொடர்பில் முன்கூட்டியே தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதை இந்த டாஷ்போர்ட் கண்காணிக்கிறது. அதன் 2023 ஆம் ஆண்டுக்கான புதிய இற்றைப்படுத்தல்கள் தற்போது பதிவேற்றப்பட்டுள்ளன.

ஊழல், கொள்முதல் முறைகேடுகள், உட்கட்டமைப்பு மீதான தேவையற்ற அதிக ஒதுக்கீடுகள் போன்ற எதிர்மறையான குற்றச்சாட்டுகளளில் இலங்கையின் பாரிய அளவிலான உட்கட்டமைப்புத் திட்டங்கள் மூழ்கியுள்ளன.

இலங்கையின் கடன் சுமை கடந்த இரண்டு தசாப்தங்களில் கணிசமாக அதிகரிப்பதற்கு, இவ்வாறான திட்டங்களுக்கு நிதியளித்தமையும் அது தொடர்பான வெளிப்படைத்தன்மையின்மையும் முக்கிய காரணங்களாகும்.

2016 இல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டம் (RTI) முக்கிய அரசாங்கத் தகவல்களுக்கு பொதுவான அணுகலைச் இலகுபடுத்துவதன் மூலம் இதை மாற்ற முயற்சித்ததோடு அரசாங்கத்தை பொறுப்பேற்க பொதுமக்களுக்கு அதிகாரமும் அளித்தது. குறித்த சட்டத்தின் பிரிவு 9, ஐந்து பரந்த தொகுதிகளின் கீழ், ஒரு அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் பாரிய உட்கட்டமைப்பு திட்டங்கள் தொடர்பான தகவல்களை வெளியிடுவதற்கு அவ் உட்கட்டமைப்பு திட்டத்திற்கு பொறுப்பான அமைச்சரை கட்டாயப்படுத்துகிறது.

ஐக்கிய அமெரிக்க டொலர் 100,000 அதிகமான வெளிநாட்டுக் கருத்திட்டங்கள் மற்றும் ரூபாய் 500,000 க்கு மேற்பட்ட உள்நாட்டு கருத்திட்டங்களை, அவற்றை தொடங்குவதற்கு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு முன்னதாக, குறித்த தகவல்கள் முன்கூட்டியே வெளியிடப்பட வேண்டும் என்பது RTI சட்டத்தின் முக்கிய தேவைப்பதாகும்.

வெரிட்டே ரிசர்ச் இன் publicfinance.lk தளத்தின் கீழ் அமைந்துள்ள உட்கட்டமைப்பு கருத்திட்ட கண்காணிப்பான் (Infrastructure Watch) மும்மொழி டாஷ்போர்டானது, உட்கட்டமைப்பு திட்டங்கள் தொடர்பாக RTI சட்டத்தின் கீழ் செயல்படும் வெளிப்படுத்தல் தேவைகளுக்கு அரசாங்கம் எந்தளவு இணங்குகின்றது என்பதை கண்காணிக்கிறது. 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் 60 பாரிய அளவிலான உள்கட்டமைப்பு திட்டங்கள் தொடர்பாக ஒன்லைனில் தகவல்களை முன்கூட்டியே வெளிப்படுத்துவதை டாஷ்போர்டு கண்காணித்தது.

2022 ஆம் ஆண்டில், ரூபாய் 1.08 ட்ரில்லியன் மதிப்புள்ள 60 திட்டங்களின் 18% ஆன தகவல்கள் மட்டுமே ஒன்லைனில் முன்கூட்டியே வெளியிடப்பட்டன. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பொதுமக்களுக்கு தகவல் அளிக்க வேண்டிய கட்டாயம் இருந்தபோதிலும், உட்கட்டமைப்பு திட்டங்கள் குறித்து அரசாங்கம் பொதுமக்களை தொடர்ந்தும் இருட்டில் வைத்திருப்பதை இது தெளிவுபடுத்துகிறது.

மேலும் 2023 ஆம் ஆண்டில், 2019 - 2022 க்கு இடையில் இலங்கை அரசாங்கத்தால் தொடங்கப்பட்ட 60 திட்டங்களின் 25% ஆன தகவல்கள் மட்டுமே ஒன்லைனில் முன்கூட்டியே வெளியிடப்பட்டுள்ளன, கண்காணிக்கப்பட்டு திட்டங்களின் மொத்த மதிப்பு ரூபாய் 2.54 ட்ரில்லியனாகும். ரூபாய்ய்

இவ்வாறு குறைவான அளவில் தகவல் வெளியிடப்பட்டிருக்கும் அதேவேளை, இலங்கையில் பெரும்பான்மையினரால் பேசப்படும் இரண்டு மொழிகளான சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் பெரும்பாலான தகவல்கள் கிடைக்கப்பெறாமை மேலும் ஒரு கவலைக்குரிய விடயமாகும். உண்மையில், தகவல் அறியும் உரிமைச் சட்டம் சிங்களம் மற்றும் தமிழில் தகவல்களை வெளியிடுவதை கட்டாயப்படுத்துவதோடு, சாத்தியமானால் மட்டுமே ஆங்கிலம் பயன்படுத்தப்பட வேண்டும் என குறிப்பிடுகிறது. இருப்பினும், நடைமுறையில், அதிகாரிகள் அதற்கு நேர்மாறாகச் செய்வதாகவே தெரிகிறது.


இத்தகவல்கள் ஆங்கிலத்தில் இலகுவாக கிடைக்கப்பெறுவதாகவும், சாத்தியமானால் மட்டுமே சிங்களம் மற்றும் தமிழ் பயன்படுத்தப்பட்டதாகவும் எமது கண்டுபிடிப்புகள் தெரிவிக்கின்றன. எடுத்துக்காட்டாக, 2022 இல் 18% தகவல்கள் ஆங்கிலத்தில் இருந்தபோது, 5% மட்டுமே சிங்களத்திலும் 4% தமிழிலும் வெளியிடப்பட்டன. 2023 இல் இந்த போக்கு தொடர்ந்தது, அங்கு 25% தகவல்கள் ஆங்கிலத்தில் கிடைக்கின்ற அதே நேரத்தில் 8% தகவல்கள் மாத்திரமே சிங்களத்திலும் தமிழிலும் கிடைக்கின்றன.


குறைவான தகவல் வெளிப்பாடு மற்றும் அதனால் ஏற்படும் ஒளிபுகாநிலை ஆகியவை ஊழல், முறைகேடுகள், தேவையற்ற அதிக செலவுகள் மற்றும் குறைந்த தரம் கொண்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாரிய கடன் சுமை என்பவற்றுக்கு வழிவகுக்கின்றன. அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவு நெருக்கடிக்கு மத்தியில், வரி செலுத்துவோர் அதிக வரிகளுக்கு உட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில், பொது அரச நிதியை அரசாங்கம் எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதை அறிய பொது மக்களுக்கு பூரண உரிமை உள்ளது.

அரச நிதி பயன்பாட்டின் வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல் மற்றும் காலத்துக்கேற்ற ஊழல் எதிர்ப்புச் சட்ட சீர்திருத்தங்கள் இலங்கையின் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுக்கு முக்கியமானவை என சர்வதேச நாணய நிதியத்தால் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. ஊழலுக்கான வாய்ப்புகளை குறைக்க ஆன்லைன் நிதி வெளிப்படைத்தன்மை தளம் மூலம் பொது கொள்முதல் ஒப்பந்தங்களை வெளிப்படுத்துவதும் IMF நிபந்தனையாகும். ஆயினும்கூட, திட்ட ஒப்புதல்கள் மற்றும் அனுமதிகள் மற்றும் திட்ட கொள்முதல் மற்றும் ஒப்பந்தங்கள் போன்ற உட்கட்டமைப்பு நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கு முக்கியமான தகவல்களில் குறிப்பிடத்தக்க பங்கு பொதுமக்களிடமிருந்து மறைக்கப்பட்டுள்ளது என்பதை மதிப்பீடு வெளிப்படுத்துகிறது.

உட்கட்டமைப்புத் திட்டங்களைச் சுற்றியுள்ள அரசாங்கத்தின் தொடர்ச்சியான வெளிப்படைத்தன்மை இல்லாததால், சட்டக் கட்டளைகளை மீறி, மூடிய கதவுகளுக்குப் பின்னால் அரசாங்கம் தனது வணிகத்தைத் தொடருமா என்ற கேள்வியை எழுப்புகிறது.

சியாமா அன்சார் (வெரிட்டே ரிசர்ச்)



# வாடுவோரின் பசியை போசனம் வழங்கி போக்குவோம்

“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்று சொல்லுவார்கள் எனினும், எமது நாட்டைப் பொறுத்தவரை, இருக்கின்ற வைத்தியசாலைகளில் நோயாளர்கள் நிரம்பி வழிகின்றனர். தனியார், வைத்தியசாலைகள், மருந்தகங்களில் காத்திருப்போரின் எண்ணிக்கையும் அதிகமாகும்.

திடீர் விபத்துக்களைத் தவிர்க்க முடியாது. எனினும், வயது முதிர்வினால் ஏற்படும் நோய்கள், தொற்றுநோய்கள், குழந்தைகளுக்கு ஏற்பாடு நோய்களில் இருந்து தங்களைத் தாங்கள் காப்பாற்றிக்கொள்ள முடியும். முறையான சுகாதார நடைமுறைகளை பின்பற்றினால். நோய் தொற்றாமால் பார்த்துக்கொள்ளலாம்.

தொற்று நோய்களை விடவும், தொற்றா நோய்கள் விஸ்வரூபம் எடுத்துவருகின்றன. சுமார் 50 நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம், ஆண்களை விடவும் பெண்களுக்கு மாரடைப்பு ஏற்படுவது 31 சதவீதமாக அதிகரித்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

போதியளவான ஓய்வு, உடற்பயிற்சி இன்மை, இவற்றுக்கு அப்பால் முறையான உணவு பழக்க வழக்கம், சந்தோஷமான வாழ்க்கை ஆகியவற்றால் நோய்நொடியில் இருந்து தங்களைத் தாங்கள் காப்பாற்றிக்கொள்ளமுடியும். இதில் ஊட்டச்சத்து முக்கியமானதாகும்.

வைத்தியசாலைகள், பாலர் பாடசாலைகளில் ஊட்டச்சத்து தொடர்பில் படவிளக்கங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தாலும் அதனை ஒருசில தரப்பினரை தவிர, ஏனையோர் கடைப்பிடிப்பதில்லை. இந்த நெருக்கடியான காலக்கட்டத்தில் கடைப்பிடிக்கவும் முடிவதில்லை.

மூவேளை உணவை, இரண்டு வேளைகளாக்கி, கிடைத்ததை உண்டு வயிற்றை நிரப்பிக்கொள்ளுதல், இலவச உணவு, அன்னதானம் ஆகியவற்றுக்கு பலரும் தங்களை பழக்கப்படுத்தி வழக்கப்படுத்திக் கொண்டுள்ளனர். ஆகையால், ஊட்டச்சத்து என்பது கேள்விக்குறியாவிட்டது. இதனால், பலரும் நோய்வாய்ப்பட்டு இருக்கின்றனர்.

வருடந்தோறும் செப்டம்பர் 1ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை ‘தேசிய ஊட்டச்சத்து வாரம்’ கடைப்பிடிக்கப்படுகிறது. வலிமையான உடல், நோய் இல்லாத சமுதாயத்தை உருவாக்க ஊட்டச்சத்து மிக்க உணவுகளை உட்கொள்ளவேண்டும் என்பதை வலியுறுத்தியே இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. தற்போதைய சூழ்நிலையில், அது குதிரைக்கொம்பாகவே பலருக்கும் இருக்கின்றது.

தேசிய ஊட்டச்சத்து வாரத்திற்கு, 1980களில் மக்கள் மத்தியில் ஒரு நல்ல வரவேற்பு கிடைத்தது. ஊட்டச்சத்தான உணவு நம்முடைய வாழ்க்கை முறையை நிர்வகிக்க, ஆற்றலை வழங்குகிறது. ஆரோக்கியமாக உடலைப் பராமரிக்கிறது, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது, நாட்பட்ட நோய்களின் அபாயத்தை குறைக்க உதவுகிறது. ஆரோக்கியமான உணவு, ஆயுட்காலத்தை அதிகரிக்கிறது.

அடுத்தக்கட்டம் என்னவென யோசித்தே, ஒருவருகையான பதற்றத்துடன் இருத்தல், உடல், உள ரீதியில் கடுமையான தாக்கத்தை செலுத்துகின்றன.

எனினும், பொருளாதார நெருக்கடி, குடும்பத்தை கொண்டு நடத்தி ஜீவியம் நடத்துதல், வேலைவாய்ப்பின்மை, போதியளவான வருமானம் இன்மை, மேலதிக வருமானம் இன்மை இல்லையேல், மேலதிகமாக வேலை கிடைக்காமை, ஆகியவற்றினால், வாழ்க்கை சாதாரணமாக கொண்டு நடத்துவதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

பலரும் பசியால் வாடுகின்றனர். பசியால் வாடுவோர்க்கும் நம்மால் முடிந்தவரை, உணவு வழங்கி, அவர்களின் பசியைப் போக்குவதற்கு உறுதி பூண்டுக்கொள்வோம்.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

ஆணவம் மிகையாகும் போது, மனிதர்களுக்குச் சரி எது, தவறு எது எனப் புலப்படுவதில்லை. அத்துடன் ஆணவக்காரர்கள், தங்களது தவறுகளை ஒத்துக்கொள்வதும் இல்லை. சாதாரண மனிதன் தெரிந்தும் தெரியாமலும் சிறு தவறுகளைச் செய்வதுண்டு.

ஆனால், அரசியல்வாதிகள் அப்படிப்பட்டவர்கள் அல்லர்! இவர்கள் தங்களின் டாம்பீகமான வாழ்க்கை என்றும் நிலைக்க வேண்டும் எனக் கருதுபவர்கள். தங்களின் பரம்பரை வளம் கொழித்து வாழ வேண்டும் என்னும் ஒரே காரணத்துக்காக எதையும் செய்வார்கள்.

பொதுவாக, ஒரு சில அரசியல்வாதிகளைத் தவிர, எல்லா அரசியல்வாதிகளும் தியாகிகள் அல்ல! கஷ்டப்படாமலே தலைவர்களானவர்கள் பலர், உலகெங்கும் உலாவித்திரிகின்றனர். இப்படி இருக்கும்போது ஏனையவர்களின் நிலை என்ன?

தவறான வழிமூலமே முன்னேற முடியும் எனப் பலர் நினைக்க ஆரம்பித்து விட்டனர். இதனாலேயே உலகம் தடம்புரளுகின்றது; போர் மேகம் சூழ்கின்றது. நாடுகள் பிரச்சினைகளுக்குள் உள்ளீர்க்கப்படுகின்றன. நீதி முக்கியமானது.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வெள்ள நீரில் கழிவுகளை வீசும் விசமிகள்

யாழ்ப்பாணம், சோமசுந்தரம் வீதியையும் கோவில் வீதியையும் இணைக்கும் கோவில் ஒழுங்கை பகுதியில் கழிவுகளை விசமிகள் வீசி வருவதால், அப்பகுதியில் வசிக்கும் மக்கள் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

தற்போது மழைக் காலம் ஆரம்பித்ததுள்ள நிலையில், குறித்த ஒழுங்கையில் வெள்ளநீர் தேங்கி நிற்கிறது. இதனால், ஒழுங்கைக்குள் வசிப்பவர்கள் போக்குவரத்து உள்ளிட்ட விடயங்களில் இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்நிலையில்,டு தற்போது விஷமிகள் அந்த ஒழுங்கைக்குள் கழிவுகளை கொட்டுவதால், பலத்த இன்னல்களை அப்பகுதிகளில் வசிப்போர் எதிர்நோக்கியுள்ளனர்.

வீசப்படும் கழிவுகள், மழை வெள்ளத்தில் மிதந்து வீட்டு வளவுகளுக்குள் வருவதனாலும், வீதிகளில் வெள்ளநீருடன் கழிவுகள் சிதறி காணப்படுவதாலும் இன்னல்களை எதிர்நோக்குகின்றனர்.

இது தொடர்பில் மாநகர சபை உள்ளிட்ட தரப்புகளுக்கு அறிவித்துள்ள போதிலும் , உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

– எம். றொசாந்த்





தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கறுப்பு யூலையின் நாற்பதாண்டுகளின் பின் 16:

## சுதந்திரம்: கற்பனையில் கோட்டை கட்டி

சுதந்திரத்திற்கு முன்பிருந்தே சிங்கள-பௌத்த மேலாதிக்கம் சிறுபான்மையினருக்கு எதிரான நிறுவனமயப்படுத்தப்பட்ட அடக்குமுறைகளைப் பயன்படுத்தத் தொடங்கியிருந்தது. இது முதலாவது சட்டசபையிலே எதுவித ஒளிவுமறைவுமுமின்றி வெளிப்பட்டது. குறிப்பாக 1930களின் நிறைவுப்பகுதியில் வர்த்தகத்தில் சிறுபான்மையினரே ஏகபோகத்தினைக் கொண்டிருந்தனர். சில தொழில்கள் மீதான சிறுபான்மைச் சமூகத்தினரின் ஏகபோகத்தை உடைக்க பல நடவடிக்கைகள் செயல்படுத்தப்பட்டன. அடகு வாங்கும் பரிவர்த்தனைகள் பதிவு செய்தல், கணக்கு வைத்தல், வட்டி விகிதங்கள் மற்றும் அடகு வைக்கப்பட்ட பொருட்களை மீட்பதற்கான புதிய நடைமுறைகளால் கட்டுப்படுத்தப்பட்டன.

விவசாய ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ், இந்திய அரிசி மற்றும் ஜவுளி இறக்குமதியாளர்கள் உள்ளூர் பொருட்களை நிலையான விலையில் வாங்க வேண்டும் என்ற விதிமுறைகள் நடைமுறைக்கு வந்தன. இரத்தினச் சுரங்கங்கள் சிங்களவர்களின்; ஏகபோகமாக இருந்தது, ஆனால் ஏற்றுமதி உட்பட இரத்தினங்களின் வர்த்தகம் முஸ்லிம்களின் ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தது. முஸ்லீம்கள் இரத்தினம் வெட்டுவதைக் கட்டுப்படுத்துவதைத் தடுக்கும் நோக்கில் சட்டம் இயற்றப்பட்டது.

இவ்வாறு சிறுபான்மையினரைக் கட்டுப்படுத்தல், அவர்களது வர்த்தக நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தல்; போன்றவற்றிக்கு சட்டசபை அதிக முக்கியத்துவம் கொடுத்தது. அதேவேளை நாட்டின் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் வாய்ப்பை சட்டசபை தவறவிட்டது. அபிவிருத்தியை திட்டமிடத்தக்க பலர் சட்டபையில் இருந்தார்கள்.

குறிப்பாகத் திட்டமிடல் குழுவில் ஸ்டீபன் வில்லியம் தசநாயக்க மற்றும் தேவபுர ஜயசேன விமலசுரேந்திரா ஆகிய இரண்டு பொறியியலாளர்கள் பணியாற்றினர். இருவரும் பல நல்ல திட்ட முன்மொழிவுகளைச் செய்தனர் ஆனால் ஒரு பணக்கார முஸ்லீம் நகை வியாபாரியின் மகனான தலைவர் எச். மக்கன் மக்கார் அவர்களின் முன்மொழிவுகளில் ஆர்வம் காட்டவில்லை. மாறாக சேனநாயக்கா மற்றும் ஜயதிலகவின் கொள்கைகளை அவர் நெருக்கமாகப் பின்பற்றினார், மேலும் 1938 இல் இலங்கை சிங்களவர்களால் ஆளப்படுவதை மக்கன் மக்கா விரும்புவதாக பகிரங்கமாகக் கூறியதற்காக முதன்மையாக நினைவுகூரப்படுகிறார்.

விமலசுரேந்திரா நாட்டின் வறுமைக்கு தீர்வாக தொழில்மயமாக்கலை வாதிட்டார். 1916 ஆம் ஆண்டு முதல் பொதுப்பணித் துறையில் அவர் ஆற்றிய பணி, நாட்டின் நீர்மின்சார ஆற்றலை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியமையாகும். 1924 ஆம் ஆண்டு சட்டசபை லக்சபான மின் உற்பத்தி நிலையத்திற்கான அவரது திட்டத்தை அங்கீகரித்தது, அது 1927 இல் கைவிடப்பட்டது.

ஒரு சட்டசபை உறுப்பினராக, விமலசுரேந்திர லக்சபான திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு பலமுறை முயன்று தோல்வியுற்றார், மேலும் விவசாயத்தை வினைத்திறனாக்கல் என்ற போர்வையில் கொலனிகள் ஆக்கப்படுவதையும் அதற்காக அரச செலவினங்களை விமர்சித்தார். விவசாயத்தில் மிகவும் திறமையான முதலீட்டுக்கான வாய்ப்புகளை உள்ளாக்கக்கூடிய திட்டங்களை முன்மொழிந்து அதற்காக வாதிட்டார். ஆனால் அவை செவிடன் காதில் ஊதிய சங்காகிற்று.

1935 இல் ஒரு மின்சார சபையை உருவாக்க அவர் முன்மொழிந்து அதில் வெற்றியும் கண்டார். ஆனால் 1937 இல் மின்சார சபை கலைக்கப்பட்டது. 1969 வரை அது மீள நிறுவப்படவில்லை. அவர் இலங்கையில் உருவாக்கக்கூடிய பல சாத்தியமான தொழில்களை பரிந்துரைத்தார். ஆனால் சிறுபான்மையினரைக் குறிவைப்பதிலேயே சட்டசபை உறுப்பினர்கள் காலத்தைச் செலவழித்தனர். அவர் 1936 இல் மீண்டும் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டார்.

இதேகாலப்பகுதியில் சில முக்கியமான அரசியல் நிகழ்வுகள் நடந்தன. முதலாவது, சிங்களத் தேசியவாதம் தன்னை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தியது. குறிப்பாக ஆட்சியதிகாரத்தை முழுமையாகக் கட்டுப்படுத்துவது பற்றிய அக்கறைகள் வலுப்பட்டன. இரண்டாவது, சிங்களத் தேசியவாதத்தின் வளர்ச்சியை எதிர்நோக்க தமிழ்த்தலைவர்கள் தயாராக இருக்கவில்லை. குறிப்பாக பிரித்தானிய விசுவாசியான பொன்னம்பலம் இராமநாதனிடமிருந்த தமிழ் இனவாத அரசியல் வெகுசனத் தன்மை அற்ற மேட்டுக்குடி அரசியலாக இருந்தது. எனவே தமிழ்த் தேசியவாத நோக்குடைய அரசியற் கட்சி ஒன்று அவரது காலத்தில் உருவாகவில்லை. இது முக்கியமானது.

மூன்றாவது, தமிழ்த் தேசியவாதம் தனிமனித ஆளுமையின் மீது தங்கியிருந்தது. குறிப்பாக வடபுலத்துத் தமிழ் மேட்டுக்குடி அரசியலில் இராமநாதனின் மறைவு தலைமைக்கான ஒரு வெற்றிடத்தை உருவாக்கியது. அதைத் தனது நாவன்மையாலும் அரசியல் தந்திரோபாயங்களாலும் இருந்தது. ஜி.ஜி. பொன்னம்பலம் தனதாக்கிக் கொண்டார். 1944ல் அவர் தமிழ்க் காங்கிரஸ் என்ற யாழ்ப்பாண மையக் கட்சியைத் தொடக்கினார்.

நான்காவது, இலங்கையைப் பல இனங்கள் கொண்ட ஒரு தேசமாக நோக்கி அவற்றின் ஒற்றுமையின் அடிப்படையில் இலங்கைக்குச் சுதந்திரம் கோரி நின்ற அரசியற் கட்சி 1935ல் உருவாக்கப்பட்ட லங்கா சமசமாஜக் கட்சி மட்டுமே என்பது கவனத்துக்கு உரியது.

இந்தப் பின்புலத்திலேயே பியதாச சிரிசேன ஒரு சிறந்த பௌத்த சமூகம் என்று தான் நினைத்ததற்கு ஏற்க சுதந்திர இலங்கை அமைய வேண்டும் என்று வாதிட்டார். டபிள்யு. ஏ. சில்வா மற்றும் மார்ட்டின் விக்கிரமசிங்க போன்ற பிற்கால நாவலாசிரியர்கள் ஒரு சமூகத்தின் மிகவும் யதார்த்தமான பார்வையை வரைந்தனர்.

கல்வி கற்ற சிங்கள இலங்கையர்கள் பௌத்தம் உத்தியோகபூர்வ மதம் மட்டுமல்ல, ஆட்சிக்கான அடித்தளமாகவும் இருக்கும் எதிர்காலத்தைப் பற்றிய பார்வையை முன்வைத்தனர். அவர்கள் சிங்களம் அரச கரும மொழியாக இருக்கும்; என்றும் மிஷனரி மற்றும் மதப் பள்ளிகள் ஒழிக்கப்படும்; மற்றும் அரசு சிங்களவர்களின் கலாசார பாரம்பரியத்தை ஊக்குவிக்கும் போன்றவற்றை முன்னிறுத்தினர். சிங்கள வாக்காளர்களின் ஆதரவைப் பெற ஆர்வமுள்ள கிறீஸ்தவ உயரடுக்கினர் இந்த யோசனைகளை எதிர்க்கவோ, தடுக்கவோ எதுவும் செய்யவில்லை. அனைத்து இன சமூகங்களின் சில அரசியல்வாதிகள் ஆங்கிலத்தை காலவரையின்றி உத்தியோகபூர்வ மொழியாகவும், சமூகங்களுக்கு இடையே இணைப்பு மொழியாகவும்இ சட்டம், அரசாங்கம், நிதி, வணிகம், உயர் புலமைப்பரிசில் மற்றும் சர்வதேச உறவுகளின் அத்தியாவசிய மொழியாகவும் விரும்பினர்.

சிங்கள தேசியவாதிகளும் சில முஸ்லிம்களும் சிங்களத்தை அரச கரும மொழியாக ஆக்க விரும்பினர், மேலும் பெரும்பாலான தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகள் சிங்களம் மற்றும் தமிழ் இரண்டையும் உத்தியோகபூர்வ மொழிகளாக ஆக்கவேண்டும் என்று வாதிட்டனர். சிங்களம் அல்லது சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளினை முன்னிலைப்படுத்தியோர் பிரித்தானிய கொலனியாதிக்கம் ஆங்கிலம் படித்தவர்களுக்கு வழங்கிய நியாயமற்ற நன்மைகள் மற்றும் தாய்மொழியில் படித்தவர்கள் ஆங்கிலத்தில் செயல்படுவதில் உள்ள சிரமம் குறித்தும் கவலை கொண்டிருந்தனர்.

இதேவேளை சிங்கள மொழி குறித்த இன்னொரு நெருக்கடியும் தோற்றம் பெற்றது. சிங்கள தேசியவாதிகள் எந்தச் சிங்களம் தேசிய மொழியாக இருக்க வேண்டும் என்பதில் வேறுபட்டது குறிப்பிடத்தக்கது. பேச்சுச் சிங்களம் இலக்கிய சிங்களத்திலிருந்து பெரிதும் வேறுபடுகிறதுஇ மேலும் எழுத்து மொழியின் பல்வேறு வடிவங்கள் ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன. பிக்குகள் மற்றும் அறிஞர்கள் சமஸ்கிருதம் மற்றும் பாலியிலிருந்து பல கடன் வார்த்தைகளை உள்ளடக்கிய பாணியில் எழுதினார்கள்.

பத்திரிகையாளர்கள் மற்றும் நாவலாசிரியர்கள் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக பேச்சு மொழிக்கு நெருக்கமான இலக்கிய வடிவங்களை உருவாக்கி வந்திருந்தார்கள். முனிதாச குமாரனதுங்கவின் தலைமையின் கீழ் உள்ள எழுத்தாளர்கள், சிங்கள மொழியின் ஒரு பதிப்பான ஹெலாவை கற்பிக்க வேண்டும் என்று கோரினர். சட்டசபையில் சி.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா இலவசக் கல்விக்கு அழுத்தம் கொடுத்தார்.

கிறிஸ்தவராகப் பிறந்து கல்வி கற்ற கன்னங்கரா பௌத்த மதத்தைத் தழுவி இரண்டு சட்டசபைகளிலும் கல்வி அமைச்சராக இருந்தார். அரசாங்கத் திணைக்களங்களில் ஆங்கிலத்திலிருந்து தாய்மொழிக்கு மாறுவதை எதிர்பார்த்து கன்னங்கரா சிங்களம் மற்றும் தமிழ் மொழியைக் கற்க ஊக்குவித்தார்.


தோட்டப் பாடசாலைகளில் தமிழை விட சிங்கள மொழியே பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று முன்மொழியப்பட்டது. ஆனால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஏனெனில் சிங்களம் ஒன்றே மொழியாதல் வேண்டும் என்று கடும்போக்குவாதிகள் உறுதியாக இருந்தனர்.

சுதந்திர இலங்கை என்பது பௌத்தத்தை அரச மதமாகவும் ஆட்சியின் துணைகாட்டியாகவும், சிங்களம் அரசகரும மொழியாகவும் கல்வி மொழியாகவும் இருத்தல் வேண்டும் என்பதே பெரும்பான்மை விருப்பாக இருந்தது. இந்தக் கனவுடனேயே இலங்கை சுதந்திரத்தை நோக்கிய பயணத்தைத் தொடங்கியது.

SLT–MOBITEL இனால் டிஜிட்டல் புகைப்படக் கட்டமைப்பான

# ‘picsforest.com’ அறிமுகம்

இலங்கையின் புகைப்படக் கலைஞர்களின் திறமைகளை வெளிப்படுத்தி, பாவனையாளர்களுக்கு பிரத்தியேகமான, சிறந்த உள்நாட்டு பொருளடக்கங்களை வழங்கும் வகையில், நாட்டின் முதலாவது டிஜிட்டல் புகைப்படக் கட்டமைப்பான ‘wpicsforest.com’ ஐ SLT-MOBITEL அறிமுகம் செய்துள்ளது. நாட்டின் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை வலிமைப்படுத்தும் செயற்பாடுகளில் மற்றுமொரு டிஜிட்டல் படிமுறையாக இந்த நடவடிக்கை அமைந்துள்ளது.




வெளிநாடுகளைச் சேர்ந்த பல புகைப்படக் களஞ்சிய இருப்புகள் விற்பனை மற்றும் கொள்வனவு இணையத்தளங்கள் காணப்பட்ட போதிலும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவை உள்நாட்டுக்கு உகந்த வகையில் அமைந்திருப்பதில்லை. எவ்வாறாயினும், பல உள்நாட்டு அல்லது சர்வதேச புகைப்படக் கலைஞர்களுக்கு தமது திறமைகளை வெளிப்படுத்தி, தமது புகைப்படங்களுக்கு வருமானம் பெற்றுக் கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. மேலும், உள்நாட்டு புகைப்படங்களை பெற்றுக் கொள்ள எதிர்பார்க்கும் பாவனையாளர்கள், சர்வதேச இணையத்தளங்களில் தங்கியிருக்க வேண்டியுள்ளதுடன், அவை செலவு அதிகமானதாகவும் அமைந்துள்ளன.

இந்த முக்கிய தேவையை நிவர்த்தி செய்யும் வகையில், SLT-MOBITEL இனால் வலுவூட்டப்பட்ட புதிய டிஜிட்டல் கட்டமைப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கையின் புகைப்படங்களை கொள்வனவு மற்றும் விற்பனை செய்யக்கூடிய புகைப்படக் களஞ்சிய e-வணிக தளமாக அமைந்துள்ளது. எவ்வாறாயினும், உள்நாட்டு புகைப்படக்கலைஞர்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல், picsforest.com இனால் வெளிநாட்டவர்களுக்கும் வாய்ப்புகளை வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. சர்வதேச நியமங்களுக்கமைய இந்த இணையத்தளம் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், பலரால் இலகுவாக அணுகப்படக்கூடிய வகையில் பாவனையாளர்களுக்கு நட்பான வகையில் அமைந்துள்ளது.

விற்பனையாளர்களுக்கு தமது திறமைகளை வெளிப்படுத்தி தம் புகைப்படங்களை காட்சிப்படுத்த முடியும் என்பதுடன், கொள்வனவாளர்களுக்கு தென்னிந்திய பிராந்திய அம்சங்களைக் கொண்ட படங்களை கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கும். புகைப்படக்கலைஞர்களின் இலவச மற்றும் கட்டணம் செலுத்தும் புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். இணையத்தளத்தினூடாக தமது பிரத்தியேகமான பணிகளை வெளிப்படுத்தி பிரச்சாரப்படுத்த முடியும். அதனூடாக பெருமளவு பார்வையாளர்களை சென்றடைந்து, தமது வாடிக்கையாளர் இருப்பை விரிவாக்கம் செய்து கொள்ள முடியும். சிறந்த உள்நாட்டு மற்றும் தென்னிந்திய பிராந்திய புகைப்படங்களை கொள்வனவு செய்ய எதிர்பார்ப்போருக்கு உகந்ததாக இந்த கட்டமைப்பு அமைந்திருக்கும்.

Referral sellers களுக்கும் பரிந்துரைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதால், தனிநபர்கள் அல்லது வியாபாரங்களுக்கு இவ்வாறு பரிந்துரைகளை வழங்குவதனூடாகவும் வருமானமீட்டக்கூடியதாக இருக்கும்.

மேலும், தமது பல்வேறு தேவைகளுக்காக சிறந்த மற்றும் பரந்தளவு காட்சித் தெரிவுகளை எதிர்பார்க்கும் நபர்களுக்கு இந்தக் கட்டமைப்பு மிகவும் பொருத்தமானதாக அமைந்திருக்கும் என்பதுடன், photographers, illustrators, designers, presenters, photo collectors என அனைத்து தரப்பினருக்கும் தமது ரசிகர்களுடன் தொடர்புகளை பேண உதவியாக அமைந்திருக்கும்.

27 பிரிவுகளிலிருந்து புகைப்படங்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும். இவற்றில், விலங்குகள், களியாட்டம், உணவு மற்றும் பானங்கள், இயற்கை, மக்கள், கட்டடக்கலை போன்றன அடங்குகின்றன.

பட்டியலிடப்பட்டிருக்கும் புகைப்படங்கள் பல்வேறு formatகளில் காணப்படும். எதிர்காலத்தில் 3D புகைப்படங்கள் மற்றும் vector illustrations தெரிவுகளையும் அறிமுகம் செய்யத் திட்டமிட்டுள்ளது.

ஏற்கனவே காணப்படும் சர்வதேச புகைப்படக் களஞ்சிய இணையத்தளங்களுக்கு மாறாக, trending photos, most dowloaded photo, most reputed photographer மற்றும் gossip pack போன்ற உள்ளம்சங்களினூடாக இது மேம்படுத்தப்படும்.

மேலும், சர்வதேச இணையத்தளக் கட்டமைப்புகளிலிருந்து, அமெரிக்க டொலர்களைப் பயன்படுத்தி படங்களை கொள்வனவு செய்திருந்தோருக்கு, தற்போது இலங்கை ரூபாயில், உள்நாட்டு இணையத்தளத்திலிருந்து படங்களை கொள்வனவு செய்யும் அல்லது விற்பனை செய்யும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாணய பரிமாற்றத்துக்கான தேவையை இந்த உள்ளம்சம் இல்லாமல் செய்துள்ளதுடன், கொடுக்கல் வாங்கல் செயன்முறையை எளிமைப்படுத்தியுள்ளது. அதனூடாக, இலங்கை சந்தையினுள் இலகுவாக, பாவனையாளர்களுக்கு நட்பான வகையில் அணுகக்கூடியதாக இருக்கும்.

உள்நாட்டு நாணயத்தைப் பயன்படுத்தி ரூ. 1000 எனும் குறைந்த கட்டணத்திலிருந்து புகைப்படங்களை கொள்வனவு செய்ய முடியும். இலகுவாக பதிவு செய்து கொள்ளக்கூடிய வகையில் தன்னியக்கமான chat box மற்றும் மின்னஞ்சல் வசதிகளையும் இந்த இணையத்தளம் வழங்குகின்றது.

# சியெட் களனி ஹோல்டிங்சுக்கு AA+ தரப்படுத்தல்

சியெட் களனி ஹோல்டிங்ஸ் (CKH) நிறுவனம் தேசிய நீண்டகால அடிப்படையிலான தரப்படுத்தலான ‘AA+(lka)/ Stable’ தகுதி நிலையை மீண்டும் பெற்றுள்ளது. தொடர்ந்து மூன்றாவது வருடமாக Fitch இடமிருந்து தகுதி நிலை உறுதிப்படுத்தலைப் பெற்றுள்ளது. உள்ளூர் வாகனங்களுக்கான டயர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனம் மற்றும் அதன் உறுதியான நிதி நிலை என்பனவற்றை மீண்டும் பிரதிபலிக்கும்; வகையில் இது அமைந்துள்ளதாக தரப்படுத்தல் முகவராண்மை அறிவித்துள்ளது.



Fitch தரப்படுத்தல் வெளியிட்டுள்ள அறிவித்தலில் ‘இந்த உறுதிப்பாடும் நிலையான வெளிப்பாடும் CKH ஆனது தனது விரிவாக்கல் திட்டங்கள் மற்றும் இன்னமும் பலவீனமான செயற்பாட்டு சுற்றாடல்கள் என்பனவற்றையும் தாண்டி போதுமான கடன் அளவீடுகள் மற்றும் பணப்புழக்கம் என்பனவற்றைப் பேணக் கூடியது என்ற எமது கண்ணோட்டத்தைப் பிரதிபலிக்கின்றது.

டயர்கள் மீதான இறக்குமதி கட்டுப்பாடு பெருமளவு தளர்த்தப்பட்டுள்ளமையால். உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான போட்டியை இது அதிகரித்துள்ளது. ஆனால் CKH அதன் உறுதியான வர்த்தக முத்திரை மற்றும் விநியோக வலையமைப்பு, இறக்குமதியுடன் ஒப்பிடுகையில் விலைகளின் நலன் என்பன காரணமாக தனது சந்தை நிலையை தக்க வைத்துக் கொள்ளும் என்று நாம் நம்புகின்றோம்’ என்று தெரிவித்துள்ளது.

AA+ கடன் தரப்படுத்தலானது Fitch தரப்படுத்தலால் வழங்கப்படும் இரண்டாவது உயர் நிலை தரமாகும். ஒரு நிறுவனம் தனது நிதி சம்பந்தமான நிலைமைகள், கடமைகள் என்பவற்றை சந்திக்கும் ஆற்றல் கொண்டது என்பதை பிரதிபலிக்கும் வகையில் இது வழங்கப்படுகின்றது. சியெட் களனி ஹோல்டிங்ஸ் நிறுவனத்துக்கான முக்கியமான தரப்படுத்தல், டயர்களுக்கான கேள்விகளை திட்டமிட்ட வகையில் படிப்படையாக சந்திக்க வல்லது என்ற ஆற்றல் நிலை, புதிய சந்தைகளின் வளர்ச்சி, உறுதியான சந்தை நிலை என்பனவற்றை உள்ளடக்கியதாகும்.

இந்த தரப்படுத்தல் பற்றி கருத்து வெளியிட்ட சியெட் நிறுவனத்தின் தலைவர் சானக்க டி சில்வா ‘இலங்கையின் தனிப்பெரும் டயர் உற்பத்தியாளர்கள் என்ற வகையில் கடந்த மூன்று வருடங்களாக எமது தரப்படுத்தல் நிலையில், சவால்கள் மிக்க வெளிக் காரணிகளுக்கு மத்தியிலும் மாற்றம் ஏற்படாமல் இருப்பது எமக்கு பெரும் மகிழ்ச்சி அளிக்கின்றது. இது ஒரு தொடர் நிலைத்தன்மைக்கான குறிப்பிடத்தக்க சான்றாகவும், பங்குதாரர்கள் அனைவருக்கும் உறுதியளிக்கும் ஒரு நெகிழ்ச்சிமிக்க நிலையாகவும், வாடிக்கையாளர்களுக்கு உறுதி அளிப்பதாகவும், வர்த்தக பங்காளிகளுக்கு அதிஉயர் தரமான உற்பத்திகளை ஏற்ற இறக்கம் உள்ள சந்தை நிலையிலும் கூட இடையூரற்ற விதத்தில் விநியோகிக்கும் வகையிலும் அமைந்துள்ளது’ என்றார்.



# சந்திரனில் சரித்திரம்

சந்திராயன் மூன்றின்று
சந்திரனில் இறங்கி
எந்திர மானிடரைத் தன்
விந்தையால் வியக்க வைத்து

தமிழனின் புத்தியும்
விண்வெளிக்கு விரைந்ததென்று
பாரதம் மட்டுமல்ல
பாருமிங்கு புகழுதே...

வல்லரசு மட்டுமல்ல
மூவேந்தர் ஆண்ட மண்ணின்
வேதாந்த வில்லில் இருந்து
புறப்பட்ட அம்பாய்
நிலவை நிழற்படமெடுக்க
விரைந்ததொன்று
வெற்றிக் கனி சுவைத்து
நிலவில் உலவுதின்று



குகதா
கிளிநொச்சி



# அழகைத் தேடி

எரிவதில் தீபம் அழகானது.
சுடுவதில் சூரியன் அழகானது.
வளர்வதில் பிறை அழகானது..
உழைப்பதில் வியர்வை அழகானது.
பாடுவதில் குயில் அழகானது
உறவினில் நட்பு அழகானது.
மலர்களில் ரோஜா அழகானது..
நிறங்களில் கறுப்பே அழகானது..
இத்தனைக்கும் இதற்கு மேலேயும்.
எப்போதும் தாய்மை அழகானது.
இதை உணர்ந்த அத்தனை உள்ளங்களும் அழகானது...
இதைவிட வேறு என்ன வேண்டும் வாழ்வில்.....
குறை ஒன்றும் இல்லையே
அழகான வாழ்க்கையை ஆராதிப்போம்.



றொசில்டா அன்டன்.

# உயிரின் நகல் நீயே

உருக்கிய இரும்பனெ இதயம் கொண்டவன்
உருகிய பனியென மலையும் சரிந்தேன்
வேல்விழி எய்யும் விடத்தைத் தாங்கி
வேங்கை மனதில் வெந்தழல் பூத்தது

பூட்டிய வீட்டில் புழுதியாய் இருந்தேன்
பூங்குழல் சூடிய புதையலை காணு முன்
அரும்பிய தேனோ! உந்தன் அன்பு
அதிசயக் காதல் என்னுள் முளைத்தது

உன்முகம் கண்டு நிலவை வெறுத்தேன்
உலையில் மிளிரும் இழையாய் பிறந்தேன்
விண்மீன் கூட்டம் பற்களில் நகைத்திட
விண்ணும் வெறுமையாய் விரக்தி கொண்டதோ!

அலையும் கூந்தலில் அன்பே நானும்
ஆழ்கடல் தீவில் சிறையாய் தவித்தேன்
மலர்களின் எழிலே மதுவின் ஊற்றே
மகரந்த வண்டென மடியில் தவழ்ந்தேன்

விழிகளில் வில்லை வளைத்திடும் கொடியே
விரதம் மறந்தேன் கிரகண நிலவே
மாலை நேரத்து மஞ்சள் வெயிலே
மயங்கும் மதியும் மார்கழி முகிலே

நாடியில் துடிக்கும் நர்த்தன அழகே
நயக்கும் இலக்கிய நவரச விருந்தே
உதடுகள் சொல்லும் உன்னத இணையே
ஊமை நெஞ்சம் உனக்காய் உரைக்கும்

மூங்கிலில் நுழைந்த குயிலின் கீதமே
முழுதாய் கலந்தேன் சுவாசத் தென்றலே
ஈன்றவள் அன்பில் இதுவரை இயம்பினேன்
ஈர்க்கும் நீயே உயிரின் நகலே...



சம்பூர் சமரன்

# பிரம்படி




பல நூல்களை
வெளியிட்டு புகழ்கண்டு
விலை மதிப்பிலா
வெற்றிகளை குவித்திட்ட
எழுத்தாளனின் விரல்கள்
எழுத்துப் பிழைக்காக
தமிழாசானின் பிரம்படியை
சுவைத்திட்ட அனுபவத்தை
கண்கள் பனிக்க
அசைபோட்டுக் கொண்டான்
ஆசிரியர்தின மேடைதனில்..



பா.அஸா பஸ்லி
கொழும்பு



# பிழைக்கத் தெரியாதவர்

கணக்காளர் பிழைப்பதற்கு
கனவழி உண்டு
பிணக்காக்கி பிழைப்பதனை
தடுப்பவர் உண்டு
வரிப்பணத்தில் வாழ்கின்றோம்
என்பதைச் சொல்லி
கரிப்பணத்தைக் கலந்துண்ணும்
கயவரே எங்கும்.

பகல்கொள்ளை அடிக்கின்றார்
பலபேர் கூடி
பம்மாத்தும் காட்டுகிறார்
பலதையும் மூடி
பக்தியென்று நடிக்கின்றார்
பலஇடம் ஓடி
பச்சையாக எடுக்கின்றார்
பற்றினைத் தேடி.

ஊழியரைச் சுரண்டுகின்ற
ஒப்பந்தம் செய்து
ஒன்றாகச் சேர்ந்தங்கு
உறிஞ்சியதில் குடித்து
வேதனைகள் படுவோரை
வெறுப்போடே பார்த்து
வேண்டியவர் வாழ்ந்திடவே
வேதாந்தம் உரைப்பார்.

நாக்காலும் கரத்தாலும்
நற்சுத்தம் பேணா
நன்மைகளை அனுபவிக்கும்
நாலுபேரும் சேர்ந்து
தாக்காமல் தாக்குவார்
தம்பிழைப்புக் கெட்டால்
ஆக்காமல் ஆக்குவார்
அதிலேதும் கண்டு.

என்வீட்டின் முன்னாலே
இருக்கின்ற கணக்காளர்
என்நேரம் பார்த்தாலும்
ஏன்வந்தோம் இங்கென்பார்
கன்னாளாய் பார்த்துவிட்டு
கதையினைநான் கேட்கவே
சொன்னவற்றைப் பார்த்தாலே
பலர்சோற்றுக்குள் பூசணி.



நீலையூர்
சுதா

வொஷிங்டன்

# உக்ரேனுக்கு அமெரிக்கா ஆயுதங்கள் விநியோகம்

ரஷ்யா உக்ரேன் இடையிலான போர் ஒன்றரை ஆண்டுகளாக தொடர்ந்து வருகிற நிலையில், உக்ரேனுக்கு போரில் உதவ 250 மில்லியன் டொலர் மதிப்பில் கூடுதலாக ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகள் வழங்குவதாக அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

நிலக்கரி சுரங்க பயன்பாட்டுக்கான உபகரணங்கள், இயந்திரத் துப்பாக்கிகள், ஏவுகணைகள், ஆம்புலன்ஸ், போர் மருத்துவ உபகரணங்கள், உதிரி பாகங்கள் உள்ளிட்டவை வழங்கப்பட உள்ளன.



கடந்த ஆண்டு பெப்ரவரியில் உக்ரேன் மீது ரஷ்யா போர் தொடுத்தது. உக்ரேனின் அடிப்படை உள்கட்டமைப்பை ரஷ்யா தரைமட்டமாக்கியது. இந்தத் தாக்குதலில் உக்ரேனில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இந்தப் போரில் உக்ரேனில்1000 பள்ளிகள் அழிக்கப்பட்டுள்ளதாக யுனிசெப் தெரிவித்துள்ளது.

ஒன்றரை ஆண்டுகளாக ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. உக்ரேனும் ரஷ்யா மீது பதில் தாக்குதல் நடத்துகிறது. எனினும், ரஷ்யாவை எதிர் கொள்ளும் வகையில் உக்ரேனிடம் இராணுவக் கட்டமைப்பு இல்லை. இந்நிலையில், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகள் உக்ரேனுக்கு ஆயுதங்கள் வழங்கி உதவுகின்றன.

## பெண்களிடையே மாரடைப்பு அதிகரிப்பு



50 நாடுகளில் நடத்தப்பட்ட 15 ஆய்வின்படி இதய நோயால் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள் தான் என கண்டறியப்பட்டுள்ளது. வாந்தி, தாடை வலி மற்றும் வயிற்று வலி போன்றவை இதய நோய்க்கான பொதுவான அறிகுறிகளாகும். இந்த அறிகுறிகள் மருத்துவர்களால் அல்லது நோயாளிகளால் கவனிக்கப்படாமல் விட்டால் நோயறிதல் மற்றும் சிகிச்சைக்கு தாமதமாகிறது.

35 முதல் 54 வயதுடைய பெண்களிடையே மாரடைப்பு 21 சதவீதத்திலிருந்து 31 சதவீதமாக அதிகரித்துள்ளதாக அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

அறிகுறிகள் தோன்றிய பிறகு பெண்கள் ஆண்களை விட தாமதமாக மருத்துவமனைக்குச் செல்கிறார்கள். மேலும் ஆண்களுக்கு நிகரான விகிதத்தில் பெண்களை மருத்துவமனையில் மருத்துவர்கள் அனுமதிப்பதில்லை.

சிங்கப்பூர்

## ஜனாதிபதி தேர்தல்: தமிழருக்கு வாய்ப்பு



சிங்கப்பூர் நாட்டின் ஜனாதிபதி தேர்தல் வெள்ளிக்கிழமை நடக்கிறது. இதில், இந்திய வம்சாவளி தர்மன் சண்முகரத்தினம் வெற்றி பெற அதிக வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. சிங்கப்பூரின் ஜனாதிபதி ஹாலிமா யாகூப்பின் பதவி காலம் வரும் 13ம் திகதி முடிகிறது. இந்நிலையில் நாட்டின் 9வது ஜனாதிபதி தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நடக்கிறது.

இந்த தேர்தலில் தமிழரான தர்மன் சண்முகரத்தினம் (66),சிங்கப்பூர் குடியுரிமை பெற்ற காக் சோங்(75) மற்றும் டான் கின் லியான்(75) போட்டியிடுகின்றனர். இந்த 3 பேர் இடையே மும்முனை போட்டி ஏற்பட்டுள்ளது.

மாட்ரிட்

## ஸ்பெயினில் தக்காளி திருவிழா



ஸ்பெயின் புனோல் நகரத்தில் தக்காளி திருவிழா கோலாகலமாக நடைபெற்றது. ஒரு டிராக்கர் முழுவதும் கொண்டுவரப்பட்ட தக்காளிகளை ஒருவர் மீது மற்றவர்கள் வீசி உற்சாகமாக திருவிழாவை கொண்டாடினர்.

ஸ்பெயினின் கிழக்கு நகரமான புனோலில் ஆண்டுதோறும் டொமடினா என்கிற தக்காளி திருவிழா நடைபெறுகிறது. அதாவது, ஒருவர் மீது ஒருவர் பழுத்த தக்காளிகளை தூக்கி எறிந்து விளையாடும் திருவிழாதான் அது. இதற்காக சுமார் 120 டன் தக்காளி பயன்படுத்தப்பட்டுள்ளன.

இந்த திருவிழாவில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் உட்பட சுமார் 15,000 பேர் தக்காளியுடன் ஒருவருக்கொருவர் மோதிக்கொண்டனர். தக்காளி திருவிழாவால் தெருக்கள், வீடுகள் மற்றும் பங்கேற்பாளர்கள் என அனைவரும் தக்காளியில் நனைந்தனர். இதனால் அப்பகுதி முழுவதும் சிவப்பு நிறுத்தில் காட்சியளித்தது.

மும்பை

## சிறுவனை ஐந்து துண்டுகளாக கூறுபோட்ட ஓட்டோ சாரதி

தனது மனைவி, மைத்துனர் குறித்து அடிக்கடி புகார் தெரிவித்த 17 வயது சிறுவனைக் கொன்று உடலை ஐந்து துண்டுகளாக ஓட்டோ சாரதி கூறுபோட்ட சம்பவம் மும்பையில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

17 வயதான ஈஸ்வர் கடைசியாக ஷேக்குடன் சென்றது தெரிய வந்தது. இதையடுத்து அவரைப் பிடித்து பொலிஸார் விசாரணை நடத்தினர். அப்போது ஈஸ்வரை கொலை செய்ததை ஷேக் ஒப்புக்கொண்டார். தனது மனைவி மற்றும் மைத்துனர் குறித்து அடிக்கடி புகார் கூறியதால் ஈஸ்வரை குத்திக் கொன்றதாக ஷேக் கூறினார்.

சமையலையில் ஐந்து துண்டுகளாக வெட்டி கூறுபோட்ட நிலையில், ஈஸ்வர் உடல் இருந்ததையடுத்து, உடலைக் கைப்பற்றி, உடற்கூராய்வுக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதையடுத்து ஷபீக் அகமது ஷேக் மீது வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

ஆந்திரா

## ஆசிரியர்கள் அலைபேசி பயன்படுத்த தடை




பாடசாலைகளில் அலைபேசி பயன்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கு கடும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. விதிகளை தொடர்ந்து மீறுவோரின் போன்கள் பறிக்கப்படலாம் என்று அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆந்திர மாநிலத்திலுள்ள பாடசாலைகளில் பாட நேரங்களின்போது ஆசிரியர்கள் அலைபேசி பயன்படுத்துவதாக புகார்கள் எழுந்துள்ளன. அந்த நேரங்களில் தனிப்பட்ட விஷயங்களுக்காக அலைபேசிகளை ஆசிரியர்கள் பயன்படுத்துவது தெரிய வந்துள்ளது. இதனால் கவன சிதறல்கள் ஏற்படுவதால் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவது ஆய்வில் உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே இதனை தடுப்பதற்கு அரசு சில நடவடிக்கைகளை மேற்கொள்கிறது.

கர்நாடகா

## முகூர்த்த நேரத்தில் வந்த காதலன்



திருமணத்திற்கு வந்த காதலனை பார்த்து மனம் மாறிய மணப்பெண், தாலி கட்டி கொள்ள மறுப்பு தெரிவித்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

தொட்டபல்லாபுரத்தை சேர்ந்த இருவருக்கும் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பு நிச்சயதார்த்தம் நடைபெற்றது. ஞாயிற்றுக் கிழமை திருமணம் நடைபெறுவதாக திகதி குறிக்கப்பட்டிருந்தது.

இரு வீட்டார் சார்பிலும் ஏராளமான உறவினர்கள் மண்டபத்தில் குழுமியிருந்தனர். முகூர்த்த நேரத்தில் மணமகன் தாலி கட்ட வந்த போது, மணப்பெண் மறுத்து வாக்குவாதத்தில் ஈடுபட்டிருக்கிறார்.

கடந்த சில ஆண்டுகளாக தான் வேறு ஒருவரை காதலித்து வருவதாகவும், தங்களது காதலை வீட்டில் ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டதால் வேறு வழியில்லாமல் இந்த திருமணத்திற்கு ஒப்புக் கொண்டதாகவும் கூறியிருக்கிறார்.

மேலும் தான் காதலிக்கும் நபர் இந்த திருமணத்திற்கு வந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். மணப்பெண் கூறியதை கேட்டு அதிர்ச்சியில் உறைந்த உறவினர்கள் என்ன செய்தென்று தெரியாமல் திகைத்துப் பேய் நின்றுள்ளனர்.

இந்நிலையில் தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற காவல்துறையினர் மணப்பெண் மேஜர் என்பதால் அவருடைய விருப்பத்திற்கு மாறாக இந்த திருமணத்தை நடத்தி வைக்க முடியாது எனக் கூறியுள்ளனர்.

இதையடுத்து மண்பெண்ணின் காதலனுடன் திருமணம் செய்து வைக்க பெண் வீட்டார் ஒப்புக் கொண்டுள்ளனர். மணமேடை வரை வந்து தாலி கட்ட முடியாமல் போன மணமகன் நொந்து போய் திரும்பியுள்ளார்.

முதலாவது இருபதுக்கு– 20 சர்வதேசப் போட்டியில்

# தென்னாபிரிக்காவை வீழ்த்திய அவுஸ்திரேலியா



தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதலாவது இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டியில் அவுஸ்திரேலியா வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், டேர்பனில் நேற்று முன்தினம் நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்காவின் அணித்தலைவர் ஏய்டன் மார்க்ரம், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

இப்போட்டியில் அவுஸ்திரேலியா சார்பாக ஆரோன் ஹார்டி, மத்தியூ ஷோர்ட், ஸ்பென்ஸர் ஜோன்சன், தன்வீர் சங்கா ஆகியோர் அறிமுகத்தை மேற்கொண்டதோடு, தென்னாபிரிக்கா சார்பாக டெவால்ட் பிறெவிஸ் அறிமுகத்தை மேற்கொண்டார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, அணித்தலைவர் மிற்செல் மார்ஷின் ஆட்டமிழக்காத 92 (49), டிம் டேவிட்டின் 64 (28) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 226 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 227 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் (3), ஷோன் அபொட், சங்கா (4), ஜோன்சனிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 115 ஓட்டங்களையே பெற்று 111 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக மார்ஷ் தெரிவானார்.

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டி இன்றிரவு 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.



மர்ஹூம் எம்.ஐ.எம். இக்பால் ஞாபகார்த்த சம்பியன் கிண்ணம்

## ஏறாவூர் யங் ஸ்டார் விளையாட்டுக் கழக வசமானது

■ அஸ்ஹர் இப்றாஹிம்

அம்பாறை மாவட்ட கால்பந்தாட்ட லீக் அனுசரணையில் கல்முனை சனிமௌன்ட் விளையாட்டுக் கழகம் நடத்திய அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களை சேர்ந்த 22 முன்னணி[illegible]கால்பந்தாட்டக் கழகங்கள் கலந்து கொண்ட மர்ஹூம் எம்.ஐ.எம். இக்பால் ஞாபகார்த்த சம்பியன் கிண்ண[illegible]மின்னொளி கால்பந்தாட்டத் தொடரில் ஏறாவூர் யங் ஸ்டார் விளையாட்டுக் கழகம் மர்ஹூம் எம்.ஐ.எம். இக்பால் ஞாபகார்த்த சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சனிமௌன்ட் விளையாட்டுக் கழகத்தை 5-0 என்ற கோல் கணக்கில் வென்றே யங் ஸ்டார் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.




மர்ஹூம் ஏ.ஆர். மன்சூர் ஞாபகார்த்த தொடர்

## சம்பியனானது சம்மாந்துறை

■ அஸ்ஹர் இப்றாஹிம்

சாய்ந்தமருது நண்பர்கள் வட்டம் ஒழுங்கு செய்திருந்த 20 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட கடினபந்து கிரிக்கெட் தொடரில் சம்மாந்துறை விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

பொலிவேரியன் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 32 விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டி சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியே சம்மாந்துறை சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சம்மாந்துறை 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 177 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பிளையிங் ஹோர்ஸ் 15.1 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 74 ஓட்டங்களை மாத்திரமே பெற்று 102 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

சம்பியனான சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்துக்கு 70,000 ரூபா ய்பணப்பரிசும், சம்பியன் கிண்ணமும், இரண்டாமிடம் பெற்ற பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கு 30,000 ரூபாய் பணப்பரிசும் வழங்கப்பட்டதுடன், தொடரின் நாயகனாக தெரிவு செய்யப்பட்ட சம்மாந்துறை விளையாட்டுக் கழகத்தின் அணித் தலைவர் எச்.ஆர்.எம். இஸ்மத்துக்கு 7,500 ரூபாய் பணப்பரிசும் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது. இறுதிப் போட்டியின் நாயகனாக தெரிவு செய்யப்பட்ட அதே அணியைச் சேர்ந்த எஸ்.எம். அஃப்ஹாமுக்கு நினைவுச் சின்னம் வழங்கப்பட்டது.

ஆசியக் கிண்ணம்:

## நேபாளத்தை பந்தாடிய பாகிஸ்தான்

ஆசியக் கிண்ணத் தொடரானது நேற்று முன்தினம் ஆரம்பமாயுள்ள நிலையில், முல்தானில் நடைபெற்ற நேபாளத்துடனான குழு ஏ ஆரம்பப் போட்டியில் தொடரை நடாத்தும் நாடான பாகிஸ்தான் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

பாகிஸ்தான்: 342/6 (50 ஓவ. ) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 151 (131), இஃப்திஹார் அஹ்மட் ஆ.இ 109 (71), மொஹமட் றிஸ்வான் 44 (50) ஓட்டங்கள். பந்துவீச்சு: கரன் கே.சி 1/54)

நேபாளம்: 104/10 (23.4 ஓவ. ) (பந்துவீச்சு: ஷடாப் கான் 4/27, ஹரிஸ் றாஃப் 2/16, ஷகீன் ஷா அஃப்ரிடி 2/27, நசீம் ஷா 1/17, மொஹமட் நவாஸ் 1/13). போட்டியின் நாயகன்: பாபர் அஸாம்





13 வயதுக்குட்பட்டோருக்கான எறிபந்தாட்டம்:

## தேசியத்தில் ரிதிதென்னை இக்ரஹ் வித்தியாலயம்

■ எச்.எம்.எம். பர்ஸான்

மாகாண மட்ட மினி எறிபந்துப் போட்டியில் ரிதிதென்னை இக்ரஹ் வித்தியாலயம் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பாடசாலை அதிபர் எம்.எஸ். எம். றிஸ்மின் தெரிவித்தார்.

பாடசாலைகளுக்கிடையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற போட்டியில் 13 வயதுக்குட்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மாணவர்கள் சாதனை படைக்க அர்ப்பணிப்புடன் செயற்பட்ட உடற்கல்வி ஆசிரியர் ஆர்.ஏ.எம். பாஸித், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் ஏ.எல். எம். றிஸ்வாஹிதீன் ஆகியோர்களுக்கு றிஸ்மின் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 01 செப்டெம்பர் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.